**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**Calendar Case No.61 of 2023**
**Prosecution Witness**:PW2

| | | | |
|---|---|---|---|
| Name | சுரேஷ்(PW1) | | |
| Father's Name | சாமிநாதன் | | |
| Village | ரங்கா நகர் | | |
| Taluk | அவிநாசி | | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05th day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். விபத்தில் அடிபட்டு காலமான தினேஷ்குமார் என் அக்கா மகன். 06.01.2023 தேதி அன்று என் மச்சான் செல்வராஜும், அவரது மகன் தினேஷ்குமார் இருசக்கர வாகனத்தில் வரும்போது சுமார் மாலை 6.30 மணி அளவில் அன்னூர் டு அவிநாசி ரோட்டில் வெள்ளியம்பாளையம் பழக்கடை அருகே என் அக்கா மகன் இருசக்கர வாகனத்தை ஓட்ட செல்வராஜ் பின்னால் அமர்ந்து வந்தார். நான் தனியாக என் ஸ்கூட்டி பெப் வாகனத்தில் அவிநாசி வருவதற்காக மேற்படி ரோட்டில் வந்தேன். எங்களுக்கு பின்னால் வந்த லாரி ஓவர் டேக் எடுத்து என்னை முந்திச் சென்று தினேஷ்குமாரின் இருசக்கர வாகனத்தில் மோதியதில், இருசக்கர வாகனத்தில் வந்த இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள். வாகனத்தினை ஓட்டிய தினேஷ்குமாரை லாரி இருசக்கர வண்டியுடன் இழுத்து சென்றது. பதற்றமாக இருந்த காரணத்தினால் கேீழ விழுந்தவர்களை வாகனத்தில் ஏற்றிய பின் வாகனத்தின் பதிவெண்ணை பார்த்தேன். அந்த வாகனத்தின் பதிவெண் TN 40 P 4797 ஆகும். அந்த லாரியை ஓட்டிய நபரை பார்த்தால் என்னால் அடையாளம் கூறமுடியும். அந்த நபர் ஆஜர் எதிரி தான். அவர் பெயர் கந்தசாமி என விசாரித்து தெரிந்து கொண்டேன். வாகனம் இழுத்து சென்றதில் தினேஷ்குமாருக்கு மார்பு பகுதி முழுவதும் சிராய்ப்பு காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. முதல் உதவி செய்து ஆம்புலன்ஸ் வரவழைத்து அவிநாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து

சேர்தோம். மருத்துவர் பரிசோதனைசெய்து விட்டு இறந்துவிட்டார் என சொன்னார். இது சம்மந்தமாக புகார் கொடுத்தார், அப்போது நானும் உடன் சென்றேன். பின்னர் போலீசார் பிரேத விசாரணை செய்த போது நானும் உடன் இருந்தேன். இந்த விபத்திற்கு லாரி இடித்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

விபத்து சமயத்தில் நான் அவிநாசியில் கட்டிட வேலை செய்து வந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்த போது நான் எங்கு சென்று வந்தேன் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி அழைப்பானை வந்ததா என்றால் வந்தது போன் மூலம் தகவல் சொன்னார்கள். விபத்து நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் ஒரு நாள் கழித்து விசாரித்தனர். அதற்கு பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். போலீசார் விசாரணையின் போது லாரி இருசக்கர வாகனத்தை இழுத்து சென்றது என்ற விபரத்தை நான் சொன்னேனா என்றால் இடித்தது என்று மட்டும் தான் சொன்னேன் எழுத்து சென்றதை சொல்லவில்லை. லாரி இருசக்கர வாகனத்தை இழுத்து செல்லவில்லை என்றும் அதனால் தான் நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாகனம் ஓட்டி வந்தவர் என் அக்கா மகன். அவர் தலை கவசம் அணிந்து வந்தார் என்று நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொன்னேன். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் எண்ணை நான் விசாரணையில் சொன்னேனா என்றால் போலீசார் கேட்கவில்லை.சம்பவம் நடந்த இடம் ஒரு வளைவான பகுதி என்றால் சரிதான். அந்த இடத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். என் அக்கா மகன் தினேஷ்குமார் தான் வாகனத்தை சரியாக ஓட்டாமல் வாகனத்தின் இடது புறமாக ஓவர் டெக் செய்தபோது இந்த விபத்து நடைபெற்றது என்றால் இல்லை. நான் ஓட்டி சென்ற வண்டிக்கும் என் அக்கா மகன் ஓட்டி சென்ற வண்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை லாரி முழுவதுமாக ஓவர்டேக் செய்த பின்பு தான் விபத்து நடைபெற்றது அப்போது நான் லாரிக்கு பின்னால் தான் இருந்தேன். நான் லாரிக்கு பின்னால் சென்று கொண்டிருந்தால் லாரிக்கு முன்னர் நடந்த விபத்தை என்னால் பார்த்து இருக்க முடியாது என்றால் சரியல்ல, ஓரமாக பார்த்தேன். பைக்கின் எந்த பகுதியில் லாரியின் எந்த பகுதி மோதியது என்ற விபத்து பற்றி நான் போலீசார்

விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நடந்த பின்னிட்டு என் அக்கா மகனும் மச்சானும் எந்தெந்த பகுதியில் கீழே விழுந்தார்கள் என்ற விபரத்தை பற்றி நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி அல்ல சொன்னேன். விபத்து நடந்த தினேஷ் குமார் என் அக்கா மகன் என்பதாலும் நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் தினேஷ்குமார் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் நான் அங்கிருந்திருந்தால் நான் எங்கு இருந்து எங்கு வந்தேன் என்றும் எந்த திசையில் விபத்து ஏற்பட்டது என்றும் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நான் சொல்லியிருப்பேன் என்றும் நான் அங்கு இல்லாததால் தான் முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. தினேஷ் குமாரன் கவன குறைவால் தான் இந்த விபத்து நடைபெற்றது என்றும் லாரி ஓட்டுனரின் கவனக்குறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| <br><br><br><br>சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |